**கவனிக்க.**– 2007.06.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1501 - 2007 ජූනි 08 වැනි සිකුරාදා - 2007.06.08

1501 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 452 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 452 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வஸ்கடுவ, மஹாவஸ்கடுவ, 280 ஆம் இலக்க ஸ்தானத்தைச் சேர்ந்த போல் மைக்கல் ஸ்கொனன்பர்க் மற்றும் மாரி ப்லவா ஆகிய எம்மால் பயாகல நொத்தாரிசு வேரகல கே. நீல் சுஜித் சில்வா என்பவரால் 2004, யூலை 20 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட விசேட அட்டோர்ணித் தத்துவம் மூலம் எமது அட்டோர்ணியாக வஸ்கடுவ, மஹாவஸ்கடுவ, 280 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சீக்கு ஆராச்சிகே சந்திரசிறி சில்வா என்பவரை நியமனம் செய்தோம். கூறப்பட்ட விசேட அட்டோர்ணித் தத்துவத்தை 2007, ஏப்பிறல் 1 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்கிறோம் என இத்தால் எல்லோருக்கும் அறிவிக்கிறோம்.

போல் மைக்கல் ஸ்கொனன்பர்க்,
மாரி ப்லவா.

6-250

# ஏல விற்பனைகள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### பெறுமதிமிக்க காணித்துண்டொன்றின் ஏல விற்பனை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட அம்பிட்டி,13 ஆம் இலக்க வட்டாரத்தில் அம்பிட்டி உடுகமயில் அமைந்துள்ளதும் 58 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் நிலஅளவையாளர் தலைமையதிபதியால் சான்றுறுதி செய்யப்பட்ட 1969, மே 25 ஆந் திகதிய பி. பி. மஹா 379 என்னும் இலக்கம் கொண்ட வரைபடத்தில் பட்டியகெல எஸ்டேட்டின் துண்டு 63 என அடையாளமிடப்பட்டுள்ளதும் இருபத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26பே.) பரப்பளவுடையதுமான காணித்துண்டு முழுவதும் அதன்மீதான வழியுரிமையையும் அதன்கண் அமைந்துள்ள வீட்டையும் சேர்த்து. இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் 274/261 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*(இக்காணி இல. 19/4, அளுத்கந்தொட்ட வீதி, மாவில்மட, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த சீரங்க ஆராச்சிலாகே நலிந்த குமார மக்கஹேவல என்பவரால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு ஈடுவைக்கப் பட்டுள்ளது.)*

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2007, யூன் 27 ஆந் திகதி மு. ப. 11.30 மணி தொடக்கம் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** சித்திரமான கொள்வனவாளர் ஏலம் முடிந்ததும் பின்வரும் தொகைகளை ரொக்கமாகச் செலுத்தல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% (கொள்வனவு விலையின் மிகுதி 90% கொள்வனவு விலைக்கு ஏற்புடைத்தான வரிகள் மற்றும் விதிப்பனவுகளுடன் சேர்த்து விற்பனைத் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;
2. உள்ளூர் அதிகார சபைக்கான விற்பனை வரி 1% ;
3. ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% ;
4. மொத்தச் செலவுகளின் 50% ;
5. விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசுவின் அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் ;
6. எழுதுவினைஞரினதும் அழைப்போரினதும் கட்டணம் ரூபா 500 ;

உரித்து உறுதிகளையும் ஆவணங்களையும் "நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2" என்னும் முகவரியில் பார்வையிடலாம்.

ட்ரையட் ஆக்ஷனியர்ஸ்.

155/1, பெல்லன்வில,
பொரலஸ்கமுவ.

தொலைபேசி இல.: 011- 2731317, 011- 2724133, 0773182552.

6 -226

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி-கிராண்பாஸ் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக வளவுகள் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். பாலகிருஷ்ணன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 பெப்புருவரி 16 ஆந் திகதியிடப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இல் குறிப்பிடப்பட்டதும் பஞ்சிகாவத்த வீதி, வரிமதிப்பு இல. 228 ஐக் கொண்டதும் தரைத் தளத்தில் கூறுகள் 2 என அடையாளமிடப் பட்டதுமாகும்).**

***(காணியின் விஸ்தீரணம் : 1623.87 ச. அடி)***

**தனது உட்பிரவேசிக்கும் வழி ஏயூ2 இன் உடன் பொது இடப்பரப்பாக கொண்ட மற்றும் சொல்லப்பட்ட கூறு 2 இன் எல்லைகளாவன-வடக்கு: வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ (பஞ்சிகாவத்தை**

**வீதி) ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் ஏயு2 (படிக்கட்டு சாலை); கிழக்கு : சீஈ2 (தோட்ட வெளி) இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; தெற்கு : சீஈ 1 தோட்ட வெளியிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; தெற்கு : சீஈ1 தோட்ட வெளியிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் கூறு 1 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு : பஞ்சிகாவத்தை வீதி வழியே பாதசாரி நடைபாதையிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறுகளுக்கு மேலாகவுள்ள கூறு 3 இன் தரையின் மத்தி ; இடை : இக்கூறின் தரைத்தளம். இது சொல்லப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய, பொது மூலகங்களின் விகிதமுறையான பங்கு 18.38% ஐக் கொண்டது ; கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு கூட்டாட்சி ஏக 32/37 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**பொது மூலகங்கள் :**

**(1) கட்டிடம் அமைந்துள்ள இக்காணி**

**(2) பக்கம் 3 (தோட்ட வெளியாய் இருக்கின்ற சீஈ) இல் தரை தளத்தில் காட்டப்பட்ட சீ. ஈ. 1 (மஞ்சள் நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட) என அடையாளமிடப்பட்ட காணியின் மிகுதிப் பாகங்கள், சீஈ 2 (நீல நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட மற்றும் சீஈ 3 பச்சை நிறத்தினால் ஓரங்கள் இடப்பட்ட)**

**(3) இக்கட்டிடத்தின் அடித்தளங்கள், தூண்கள், இரும்புத் தூண்கள், உத்தரங்கள், தாங்கிகள், பிரதான சுவர்கள் மற்றும் கூரை**

**(4) (i) ஏயு 1 முதலாம் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 3 மற்றும் கூறு 4 வரை**

**(ii) ஏயு2 தரை தளம் (இதன் பக்கம் : 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாம் தள வரைபடம் மற்றும் இரண்டாம் தள வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள துணைக் கூறுகளுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கின்ற ஏயு 1 மற்றும் ஏயு 2) இல் படிக்கட்டு சாலையிலிருந்து கூறு 2 வரை**

**(5) இக்காணிக்குள் கால்வாய்களுக்கான இடப்பரப்பு**

**(6) இக்கட்டிடத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட வேறு வசதிகள்**

**(7) மண் சாக்கடை சேவைகள் :**

**(8) (i) தரைதளம் சீஈ 1 இலிருந்து கூறு 1 வரை**

**(ii) தரைதளத்தில் சீஈ 2 இலிருந்து கூறு 2 வரை, முதலாவது தளத்தில் கூறு 3 மற்றும் இரண்டாவது தளத்தில் கூறு 4 (இதன் 3 ஆம் பக்கத்தில் தரைதள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பொது மூலகங்கள் ஒதுக்குகள் சீஈ1, சீஈ2 மற்றும் சீஈ3 ஆகும்.)**

**(iii) தரை தளத்திலுள்ள கூறுகள் 1 மற்றும் 2 இற்கு சீயு3. துணை கூறு :**

**கூட்டாட்சி வரைபடம் இல. 431 (கூட்டாட்சி ஆதனத்தில் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனக் கட்டிடத்தின் உள்ளிருந்தும் புறமுமாக) இன் பக்கங்கள் 3, 4 மற்றும் 5 இல் தரை தள வரைபடம், முதலாவது தள வரைபடம் மற்றும் இரண்டாவது தள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துணை கூறு ஏயு 2 முழுவதும் இதன் விஸ்தீரணம் 200 ச. அடி ஆகும். கூட்டாட்சி வரைபடம் இல. 431 இற்கமைய கூறு ஏயு 2 இன் எல்லைகளாவன– வடக்கு : வரிமதிப்பு இலக்கங்கள் 234 மற்றும் 234ஏ பஞ்சிகாவத்தை வீதி ஐக் கொண்ட வளவுகளிலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; கிழக்கு : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி மற்றும் சீஈ2 இன் மீதான இடப்பரப்பு (தோட்ட இடப்பரப்பு); தெற்கில் : கூறுகள் 2, 3 மற்றும் 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; மேற்கு : கூறுகள் 2, 3, 4 இலிருந்து இக்கூறை பிரிக்கும் சுவரின் மத்தி ; உச்சி : இக்கூறின் கூறை ; இடை : இக்கூறின் தரைத்தளம்**

**அத்துடன்**

**முழுமையாக பெறுமதிமிக்க வர்த்தக காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் அளுத்கடை கிழக்கு : ஸ்ரீ சங்கராஜ மாவத்தை (முன்னர் ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு என அறியப்பட்ட) வழியே அமைந்துள்ளதும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரிமதிப்பு இல. 215/1 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். இராஜேந்திரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1964 ஓகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2967 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 8 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது)**

**(காணியின் விஸ்தீரணம் : 3.25 பேர்ச்சுக்கள்)**
**ஏல விற்பனை**

*(கடப்பாடுடையவர்/ஈடுவைத்தவரான கொழும்பு 10 இல் "பந்துல ரிரேடிங் என்ரபிரைஸஸ்" எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் ஏக உரிமையாளராக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கலஹேனகே அஜித் பந்துலசேன, 1995.11.17 திகதியிடப்பட்ட முறி இல. 698, 1995.05.03 திகதியிடப்பட்ட முறி இல. 3255, 1993.07.21 திகதியிடப்பட்ட முறி இல. 1203, 1995.06.21 திகதியிடப்பட்ட முறி இல. 3346, 1993.11.05 திகதியிடப்பட்ட முறி இல. 1492 மற்றும் 1993.09.09 திகதியிடப்பட்ட முறி இல. 1342 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூன் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**– 2000.07.21 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியையும் 2000.07.12 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் 2000.07.26 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் மற்றும் விற்பனை அறிவித்தலுக்கு 2007.06.08 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்:**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(5) ரூபா 58,338.12 விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 4,000.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் டவர்ஸ்', 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் - சட்டசம்பந்தமான பகுதி" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 074-701256-7, 074-701291, 2456258.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

42, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவலை.

தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772-250422

6-230

---

## செலான் வங்கி லிமிட்டெட்-எம்பிலிபிட்டிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம் உடகிந்த பிரிவு உடபலாத்த கோரளே நுகதலாவையில் அமைந்துள்ள "வேமுல்ல தோட்டம்" என்றழைக்கப்படுகின்ற அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பீ. விக்ரமசிங்கவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 4085 மற்றும் 2001.09.27 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இலக்கங்கள் 1,2,3,4,5 மற்றும் 6 கொண்ட ஏழு ஏக்கர் மற்றும் முப்பது தசம் எட்டு பேர்ச்சஸ் (7ஏ. 0றூ. 30.8பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி. (மேற்படி காணி பதுளை காணிப்பதிவகத்தில் சீ. 563/170 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது) ;

இதே காணியான ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமட பிரதேச செயலாளர் பிரிவு உடபலாத்த கோரளே நுகதலாவ கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பீ. விக்ரமசிங்கவினால் மீள அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 4519 மற்றும் 2005.03.02 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இல. 01 கொண்ட இரண்டு ஏக்கர் முப்பத்தைந்து பேர்ச்சஸ் (2ஏ. 0றூ. 35பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதிலுள்ள அனைத்தும், (மேற்படி காணி பதுளை காணிப்பதிவகத்தில் சீ. 563/268 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.)

காணியினூடாக செல்வதற்காக உரிமை :

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவு, உடபலாத்த கோரளே நுகதலாவ கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பீ. விக்ரமசிங்கவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 4519 மற்றும் 2005.03.02 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இல. 2 கொண்ட "வேமுள்ள தோட்டம்" என்றழைக்கப்படுகின்ற பதினைந்து தசம் எட்டு பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.8பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதிலுள்ள அனைத்தும். மேற்படி காணி பதுளை காணிப்பதிவகத்தில் சி 563 / 269 இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

கடன்பட்டார் என்ற வகையில் எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த இரவீத்திர சமரவீர என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து. மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 3 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2006.12.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.02.02 ஆந் திகதிய "டெய்லி மிரர்"மற்றும் "லங்காதீப" மற்றும் 2007.02.08 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**காணிக்குச் சென்றடைகின்ற வழி.**- வெலிமட நகரத்திலிருந்து நுவர எலிய வீதியூடாக சுமார் 2.5 கி. மீ. தூரம் 98 ஆம் கி. மீ. அடையாளமிடப்பட்டுள்ள இடத்தில் 200 மீற்றர் அப்பால் வலது புறம் திரும்பி 12 அடி அகலப்பாதையில் சென்று குறித்த சொத்தை சென்றடையலாம். இவ்வுட்பிரவேசப் பாதை வெகு தொலைவில் அன்றி பிரதான வீதியிலிருந்து சுமார் 110 மீற்றர் அண்மையிலே அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%); விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%); ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%); விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456258, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (சமாதான நீதவான்),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல.: 2696155, 2572940

6-245

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – வெளிமட கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் உடுகிந்த எல்லைக்குள் தபஷனி பலாத கோரலே ரத்காவை கிராமத்தில் இருக்கும் 'கொன் எலவன மங்கட' என்ற பெயரால் அழைக்கப்படும் இடத்தில் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் பி. டபிள்யு. நந்தசேன என்பவரால் 1994 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 660 என்ற வரைபடத்தின் பிரகாரம் வேறாக்கப்பட்ட லொட் 1 என்ற காணி.**

**(விஸ்தீரணம் : 1 றூட். 29பேர்ச்சஸ்)**

*(பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்ஷ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட ஹெட்டன் நஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 2005.01.04 ஆந் திகதிய இலக்கம் 70 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ரத்நாயக்க முதியான்சேலாகே புஞ்சி பண்டார ரத்நாயக்க என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளாரார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்து, அது அமைந்துள்ள இடத்திலேயே 2007 யூன் 28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மான அறிவித்தலுக்காக.***– 2007.03.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007 மாச்சு 21 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**– ஏலவிற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்தல் வேண்டும் :–

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரர் தரகுப்பணமாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 வேலை நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, எஞ்சிய தொகை குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து மீள விற்பனை செய்யவும் உரிமை வங்கிக்குண்டு.

உரிமைப்பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் "பிரதம முகாமையாளர் (கடன் அறவீடு), வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, இல. 470, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10, தொலைபேசி இல. 2661815, 2661816 இல் பெற்றுக்கொள்ளலாம்.

என். எச். பீ. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்,
அதிகாரம் பெற்ற ஏலதாரரும்.

இல. 34/31 மற்றும் 32,
"நீதி சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி",
கொழும்பு 12.

6–246

---

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – பதுளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் யடிகிந்த பிரதேச எல்லைக்குள் ஒய பலாத கோரலே அதுருகடுவ ஊரில் இருக்கும் "அமிதில்லம்கடுவேயாய" எனும் பெயரால் அறி முகப்படுத்தப்படும் காணியில் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யு. நந்தசேன என்பவரால் 2003.06.01 ஆந் திகதி (மிகவும் சரியாகத் திருத்தி) அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4485 என்ற வரைபடத்தின் பிரகாரம் வேறாக்கப்பட்ட லொட் 01 எனும் காணியாகும்.**

**(விஸ்தீரணம் : 1 ஏக்கர் 2றூ.)**

*(பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்ஷ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட ஹெட்டன் நஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 2005.08.26 ஆந் திகதிய இலக்கம் 180 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் மெனிக் ஹிரிஹாமி முதியான்சேலாகே நிசாந்த கிதுல்வத்த என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளார்),*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்து, அது அமைந்துள்ள இடத்திலேயே 2007, யூலை 04 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மான அறிவித்தலுக்காக.***– 2006.12.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007 சனவரி 17 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**– ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றியீட்டிய கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்தல் வேண்டும் :–

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரர் தரகுப்பணமாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 வேலை நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, எஞ்சிய தொகை குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து மீள விற்பனை செய்யவும் உரிமை வங்கிக்குண்டு.

உரிமைப் பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் முகாமையாளர் "ஹட்டன் நஷனல் வங்கி, கிளை (தொலைபேசி இல. 055- 2222991, 2222051)" அல்லது "கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தை, இல. 479, (தலைமை அலுவலகம்), பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு) தொலைபேசி இலக்கம் 2661815, 2661816" இல் பெற்றுக் கொள்ள முடியும்.

என். எச். பீ. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்,
அதிகாரம் பெற்ற ஏலதாரரும்.

இல. 34/31 அல்லது 32,
"நீதி சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி",
கொழும்பு 12.

6-247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.